**தலைப்பு 324 – முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 324 – முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 கட்டு நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 64,078,000 கட்டுநிதி கோருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தால் கட்டுநிதி ரூபா 78,504,000 கோரப்பட்டு ரூபா 63,446,000 கட்டுநிதி கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட | 2023 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கபட்ட கட்டுநிதி மதிப்பீடு தயாரித்து ஒவ்வொரு மாதத்திற்காகவும் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களுக்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. திட்டமிட்ட மற்றும் கோரப்பட்ட கட்டுநிதிகளுக்கிடையே முரண்கள் காணப்படுவதுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்ட கட்டுநிதியை அடிப்படையாகக் கொண்டு | தேவையினை இனங்கண்டு கட்டு நிதி திட்டமிடப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கட்டுநிதி பெறுமதியை விட 23 சதவீதம் அதிகரித்து திறைசேரியிலிருந்து கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. | ஆண்டின் போது செலவினங்களை செலவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டிற்காக மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது ஆண்டின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக்கான கட்டுநிதி திட்டத்தில் ஆண்டில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் உள்ளடக்கி திருத்தப்பட்ட கட்டுநிதி திட்டமொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மீண்டெழும் மற்றும் மூலதனம் செலவின விடயங்கள் 06 இனது நிதியேற்பாட்டில் கூட்டுமொத்தமாக ரூபா 4,050,000 அதாவது 9 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையிலான வீச்சினால் நிதியேற்பாடு குறைதத்ல்களும், 08 செலவின விடயங்களில் கூட்டு மொத்தமாக ரூபா 7,215,000 இனால் அதாவது 06 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு அதிகரித்தலும் நிதிப்பிரமாணம் 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களின் படிகள் அதிகரித்தமை, சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உயர்வடைந்தமை மற்றும் எதிர்பார்க்காத பராமரிப்பு தேவைகள் ஏற்பட்டிருந்தமை போன்றவற்றின் காரணமாக ஆரம்ப மதிப்பீட்டில் செலவின முகாமைத்துவம் செய்தல் வசதியீனமாக இருந்தமையால் திட்டமிடப்பட்ட பிரகாரம் செலவினங்கள் மேற்கொள்ளப்படாத செலவின விடயங்களின் நிதயேற்பாடு நிதிப்பிரமாணம் 66 கீழ் மாற்றப்பட்டு செலவின முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டிற்காக செலவின மதிப்பீட்டை தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் பொருத்தமாகவும் செலவின மதிப்பீடு தயாரிக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் பொருத்தமாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 08 மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டு மொத்தமான ரூபா 5,416,000 நிதியேற்பாடுகளில் ரூபா 4,072,773 பயன்படுத்தப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 1,343,227 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதம் முதல் 41 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | செலவினங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் திணைக்கள நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட காரணத்தின் அடிப்படையில் செலவினங்கள் மேற்கொள்ளாமையால் உரிய செலவின விடயங்களின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டிற்கான செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் பொருத்தமாகவும் செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 892 | பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்களின் திருத்தப்பட்ட அறிக்கையொன்று ஒவ்வொரு மூன்று வருடங்களின் இறுதியின் பின்னர் தயாரிக்கப்பட்டு பெப்ரவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் பொது 183 படிவத்தில் தயாரித்து அமைச்சு செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு பிணை வைப்பு திருத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிக்கையொன்று 2025 ஏப்ரல் மாதம் வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. | பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்களின் பிணை பதிவேடு 2025.04.04 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுத்துறையின் முறைகேடுகளை கண்டறிவதற்கு உரிய 2024 திசெம்பர் 31 வரை திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 71 முறைப்பாடுகளில் 14 முறைப்பாடுகளின் நடவடிக்கைகள் 2025 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரையிலும் முடிவடைந்திருக்க வில்லை. | விசாரணைகளுக்கு உரிய நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் எழுத்து மூலம் கோருதல், நிறுவனத்திற்கு சென்று வெளிப்படுத்தல்களை பெறுதல், பரீட்சித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பெற்றுக்கொள்வதற்கு காலம் எடுத்திருந்தது. 2024 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களினால் ஒரு உத்தியோகத்தருக்கான புலனாய்வு விசாரணை அதிக எண்ணிக்கையில் கையளிக்கப்பட்டிருந்தது. அவருக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகளையும் நிறைவேற்றுவதுடன் அந்த விசாரணை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் மாத்திரம் விசாரணைகள் ஆரம்ப கட்டத்தில் காணப்படுகின்றமையால் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பூர்த்தி செய்வதற்கு நடைமுறையில் முடியாதிருந்தது. | திணைக்களத்தின் செயலாற்றலை உச்ச அளவில் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2024 செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் உரிய பிரகாரம் நடாத்தப்பட்டுகின்றதை உறுதிப்படுத்தப்படுத்துதல் திணைக்களத்தின் ஆரம் பணிப்பொறுப்பாகும். எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 490 இல் | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சு, திணைக்களம், மாவட்ட செயலகம், சபை சபை மற்றும் விஷேட செலவின அலகுகளில் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்களில் திறைசேரி பிரதிநிதியாக உத்தியோகத்தர் நியமிக்கப்படுகின்றனர். இலங்கை கணக்காய்வாளர் சேவையில் உத்தியோகத்தர்களில் ஆறு பேர் மாத்திரம் திணைக்களத்தில் சேவையில் ஈடுபடுகின்றமையினால் சகல நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு பங்கு பற்றுதல் நடைமுறையில் மேற்கொள்ள முடியாதிருந்தமையும், பணிப்பொறுப்புக்கள் மற்றும் தேசிய பொருளாதார விசேட பங்களிப்பு வழங்குகின்ற தெரிவு செய்யப்பட்ட திணைக்களங்களுக்காக மாத்திரம் பிரதிநிதிகள் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். பிரதிநிதிகளை பெயரிடப்படாத திணைக்களங்கள் அந்த திணைக்களங்களுக்குரிய அமைச்சுக்களுக்காக நியமிக்கப்படுகின்ற | ஆகக் கூடியளவில் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது பிரச்சினையான சந்தர்ப்பங்களில் இணையவழி ஊடாகவேனும் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என கண்டறிதல் வேண்டும். |

| | |
|---|---|
| 125 இற்கு திணைக்களத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருக்க வில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் போது மேவுகை செய்கின்றனர். அதன் பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு 20 நிறுவனங்களுக்கு அண்ணளவாக மேவுகை செய்ய வேண்டியிருந்தது. சில நிறுவனங்கள் ஒரே தினத்தின் போது கணக்காய்வு மற்றும் கூட்டத்தை ஒழுங்கமைக்கின்ற சந்தர்ப்பங்களின் போது சில கூட்டங்களில் பங்குபற்றுதல் நடைமுறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தும் அடிப்படைப் பொறுப்பு உரிய நிறுவனங்களின் தரைவரின் முதன்மைப் பொறுப்பாக இருந்ததுடன் அவர்களின் நாளாந்த கடமைகளின் அடிப்படையில் ஏதாவது காலாண்டிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தாத சந்தர்ப்பங்களும் உள்ளது. திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உச்ச அளவில் பயன்படுத்தி கணக்காய்வு மற்றும் கூட்டங்களை நடாத்திச் செல்வதற்காக இயலுமான சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 50 ஆக இருந்ததுடன் அதில் 12 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அதில் 06 வெற்றிடங்கள் சிரேஸ்ட நிலையின் பதவியாகும். அந்த வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 12 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. நிறுவனத்தின் செயலாற்றல்களுக்காக சிரேஸ்ட நிலையில் உத்தியோகத்தர்களின் வெற்றிடம் தாக்கமளித்திருந்தமையும் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களினால் உரிய கடமைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தது. ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தொடர்ச்சியாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இதுவைரயில் வெற்றிடங்கள் காணப்பட்ட 06 சிரேஸ்ட பதவிகளில் 02 உத்தியோகத்தர்கள் நியமிப்பதற்கு முடியுமாக இருந்தது. | தேவையின் பிரகாரம் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |